# என் நினைவுக் குறிப்புகள்

“அந்த வெள்ளிக்கிழமையை நினைத்துக்கொண்டேன். இதோ, வந்துள்ள ஞாயிற்றுக் கிழமையையும் நினைத்துக் கொள்கிறேன். நம் நாட்டின் ஞாயிறு மறைந்து ஒரு வருஷம் ஆகிவிட்டது என்பதை நினைப்பூட்டுகிறது இந்த ஞாயிறு."

நினைவுக்குறிப்புகளுக்கு என்று ஏற்பட்ட 'டயரி'யில் இவ்வாறு எழுதியிருந்தேன் நான், இந்த முற்பகல். மறக்கணும் என்றாலும் முடியாதுதான் அந்த நாளை. எனினும் டயரி வைத்திருந்த 'தோஷம்' என்னை எழுதத் தூண்டியது, எழுதினேன்.

"என்ன? இவ்வளவுதானா எழுதியிருக்கிறாய்?" என்று கேட்டார் என் கணவர், பிற்பகலில்.

"வேறு எழுத என்ன இருக்கிறது? எழுதவும் இடம் ஏது அந்தத் தாளில்? கொஞ்சம்தான் இடம் இருக்கிறது!" என்று சொன்னேன் நான்.

டயரி என்றால் சம்பவங்களையும் எழுத வேண்டும்; அந்தச் சம்பவங்களால் எழக்கூடிய நினைப்புகள். உணர்ச்சிகள், யோசனைகள், கற்பனைகள் எல்லாம் கொஞ்சமாவது எழுத வேண்டும். நிஜந்தான். ஆனால், இன்றைக்கு நான் எழுதவில்லை அந்த முறைப்படி.

"இப்படி எழுதுவதில் பிரயோசனமில்லை என்று சொல்லியிருக்கிறேனே!" என்றார் அவர் மீண்டும்.

"ஆமாம். ஆனால் இன்றைக்கு என் மனதில் தோன்றுவதை எழுதாவிட்டால் மோசம் ஒன்றுமில்லை என்றுதான் வெறுமனே அப்படி எழுதிவிட்டு நிறுத்திவிட்டேன்!" என்றேன், எனக்கு வந்த சிரிப்பை அரைகுறையாக அடக்கிக்கொண்டு.

"ஏனோ?" என்று கேட்டார்.

"ஏனோவா? இன்றைக்கு மனதில் தோன்றுவதையெல்லாம் எழுதிச் சாத்தியப்படாது! கதையாய் நீளும் எழுதினால்!" என்றேன் நான்.

"ஏன், அந்த நாளைப்பற்றி அவ்வளவு வருத்தம் ஏற்படுகிறது என்பதனாலா?" என்று அவர் கேட்க முடியவில்லை; நான் பதில் சொன்னபோது சிரித்துக் கொண்டேயல்லவா சொன்னேன்!

"அப்படி இழுக்கடித்து எழுத வேண்டாம்! ஒரே வாக்கியத்தில், உன் மனதில் தோன்றுவதைப் பதித்துவிட வேண்டும்! காந்திஜியின் மறைவைப் பற்றி உனக்கு இன்று என்ன தோன்றுகிறது? அதை எழுதணும்!" என்றார் அவர் அழுத்தந்திருத்தமாக.

"சரி, தாருங்கள் டயரியை! உங்கள் மனதிலும் குறையிருக்க வேண்டாம், பேச்சைத் தட்டுகிறேன் என்று! காகிதத்திலும் அந்தக் குறையிடம் வேண்டாம்!" என்றேன். டயரியை வாங்கிக்கொண்டேன்.

"இந்த இடைக்கால ஒரு வருஷமும் பொதுவாக. எனக்கு இன்பம் நல்கிய நல்லாண்டாகவே விளங்கிவிட்டது! இவ்வாறு சொல்லவும், நினைக்கவும் எனக்கே வெட்கமாயிருக்கிறது! ஆனால் காந்திஜி விரும்புவது உண்மையைத்தான்! நானும் உண்மை விளம்புகிறேன்!

இப்படித்தான் எழுதினேன் இந்த ஜனவரி 30-ம் தேதித் தாளின் பிற்பகுதியிலே.

"அடிபாவி! டயரியை வேறு யாரும் பார்க்க மாட்டார்கள் என்ற துணிச்சலோ?" என்று கோபத்துடன் சொல்வதுபோல சொல்லிவிட்டுச் சிரித்தார் அவர்.

"ஏன், எழுதக்கூடாதா? நிஜந்தானே நான் எழுதினது! இந்த ஒரு வருஷத்தில் பதினோரு மாதத்துக்கும் மேலாக நமக்குச் சந்தோஷமாகத்தான் போச்சு காலம்! ஒரு இரண்டு மூன்று வாரம்தான் ஏதோ கவலை, குழப்பம், ஆரம்பத்தில்? இல்லையா?" என வினவினேன்.

"நிஜந்தான்! காந்தி மகானைப் பற்றி எழுதின இந்த இடத்தில் போலி வருத்தம் வெளிப்படுத்துவதாக வேறு எதுவும் எழுதுவது நியாயமில்லைதான்!" என்று ஒப்புக்கொண்டார் அவர். அவர் அவ்வாறு மொழிகையில், அவர் குரலிலும் பேச்சிலும் நிதானம், பக்தி, அடக்கம், தொனித்ததை நான் உணர்ந்தேன்.

"இப்படி எழுதத்தோன்றிற்று. அப்போதே! எழுத வேண்டாமே என்றுதான் விட்டுவிட்டேன். 'ஏன் எழுதத்தூண்டினோம்?' என்று இப்போது வருத்தமாக இருக்கிறதா?" என்று அவரைக் கேட்டேன்.

"இல்லை; இருக்கட்டும்! எழுத வேண்டியதுதானே! இழிவு என்ன. சந்தோஷமாகக் கழிந்த வருஷம் என்பதில்! சந்தோஷமாகத்தானே இருந்தோம்!" என்று சொல்லிவிட்டார் அவர் புன்னகை எட்டிப்பார்க்க. என் மனதும் சாந்தி பெற்றது.

மாலையில் நண்பர் ஒருவரைப் பார்க்க அவர் மட்டும் போக வேண்டியிருந்தமையால், நான் வீட்டில் தங்கிவிட்டேன்.

'இந்தமாதிரி மாலை நேரத்தில்தான்!' என்று என் மனம் எண்ணியது. தனியாளாக நான் மட்டும் இருந்தால், ஏதேதோ யோசனைகள், நினைப்புகள்.

'இப்படி எழுதிவிட்டோம்! எழுதியிருக்கக்கூடாதோ? அவருக்குக்கூட முதலில் எப்படியோ தோன்றியதல்லவா?' என்று எழுந்தது ஒரு எண்ணம்.

டயரில் இருந்தத் தாளைக் கிழிப்பதா? கிழித்தால் இந்தத் தேதியே இராது! கிழிக்காமல் எழுதினதை அடித்துவிட்டு வேறு எழுத இடங்கிடையாது தாளில். அடைத்து நிரப்பியாச்சு.

மேஜை மேல் வெள்ளைத்தாள்கள் கிடந்தன. ஒரு யோசனை தட்டிற்று. பேனாவுடன் அமர்ந்தேன் மேஜையருகே, பேனா முனையும் சிந்தனையும் இழைந்து ஓட விட்டேன்.

** ** **

அந்த வெள்ளிக்கிழமை.

புயற்காற்றுக்கு முன்னால் கிளுகிளுப்புடன் வீசும் மாயக் காற்றிலுங்கூட, களங்கமறியாதவைகளாய், கலப்பற்ற மகிழ்வுடன்தானே அசைந்தாடுகின்றன செடி கொடிகள்? நாங்களும் - அப்படித்தான் - கலப்பற்ற உவகையுடன் ரசித்துக்கொண்டிருந்தோம் இசையை. நாங்கள்?..... யார்? - அவரும் நானுமல்ல! பத்மாவும் நானும்! அவரும் நானும் திருமண மூலம் பிணைபட்டிருக்கவில்லை அப்போது! ஏன் எங்கள் உள்ளங்கள்கூட அன்பினால் இணைபடவில்லை அப்போதைக்கு!

மணி இன்னும் ஆறு அடிக்கவில்லை.

"இன்னும் ஐந்து நிமிஷம்தான் இருக்கு! பாட்டு முழுக்கக் கேட்க முடியாதுபோலிருக்கு!" என்றாள் பத்மா.

"அதென்ன கணக்கோ? ஒரு ஐந்து நிமிஷம் முன்னே பின்னே போனால்தான் என்ன?.... வரப்போகிறது ஏதோ நல்ல நிகழ்ச்சியா - அதுவுமில்லை! செய்திகள்!" என்று ஒத்தூதினேன் நான்.

மென்னியைப் பிடிக்கிற மாதிரி குரலிசையை இடைமடக்கி, அஞ்சல் செய்வதை நிறுத்திவிடப் போகிறார்கள் வானொலி நிலையத்தார் என்பதிலே எங்களுக்கு மாபெரும் அதிருப்தி.

அந்த சமயம் அறையுள் வந்தார் பத்மாவின் கணவர்; செய்திகள் கேட்கணுமென்று வந்தார். வெகு சிரத்தையாக நாற்காலியை வானொலிப் பெட்டியருகு இழுத்துப்போட்டுக்கொண்டு உட்கார்ந்தார்.

"நமக்குச் செய்திகள் முக்கியமில்லை! ஆனால் எல்லோருக்கும் அப்படியா?" என்று சொல்லாமல் சொல்லிக்கொண்டோம்.

"செய்திகள் வேதனை வேண்டாம் நமக்கு!" என்று எழுந்து போக எழுந்தேன் ஆனால் அடுத்த பத்து நிமிஷங்களுக்கு அப்புறம் நல்ல நிகழ்ச்சி இருக்கும். கேட்கலாம் என்று அவள் சொன்னதால் ஒப்பினேன்.

செய்திகள் துவங்கின.

"உஸ். இருங்கோ! நியூஸ் வருகிறது!" என்று அடக்கிவிட்டார் அவர். திரும்பிப் பாராமலே! செய்தி ஆர்வம்!

"நாம் போகலாமே! பேசாமல் நம்மால் இருக்க முடியாது!" என்றேன் நான் மெல்ல.

"நிஜந்தான்! மௌன விரதம் நம்மாலே முடியாதுதான்!..... வேண்டவும் வேண்டாம்! வெளியிலே போய் பேசலாம்!" என்று அவள் குரலை அடக்காமலே பேசிக்கொண்டு எழுந்தாள். கணவன் காதில், அவரைப் பற்றிய - அவருடைய செய்தி ஆர்வத்தைப் பற்றிய - விமரிசனம் விழட்டுமே என்றுதான் அவள் எண்ணம்.

மனப்போக்கிலே அவருடன் ஒத்துப்போகாவிட்டாலும், அன்பில் குறைந்தவளல்ல தான் என்று பெருமிதம், நம்பிக்கை!

எடுப்பாகக்கேட்ட அவள் குரலொலியால் அவர் சினந்து கூவுவார் என்று ன்றியது எனக்கு அந்தக்கணம் ஆனால் . . .

'ஏய் . . .ஏய்! . . . இருங்கோ! . . . என்ன?" என்று படபடத்து எழுந்தார் ஸ்ரீனிவாசன்.

"என்ன . . . காந்திஜியா . . . அவரையா?' என துடித்தார் அடுத்த நிமிஷம்.

ஆம், அந்தச்செய்தியேதான்! - நம்புதற்கியலாத அதே செய்திதான்! நாங்கள் வெறுத்த செய்திகளின் சிகரமாகி விளங்கிய அந்த கொடுஞ்செய்திதான்!

'கால' தேவனின் கட்டளைகளுக்குப் பழக்கப்பட்டவர்களும், கடமைக்குட்பட்டவர்களுமான ரேடியோ நிலையத்தினர், 'கால' தேவனின் இந்தக் கட்டளையைப் பற்றியும் சொன்னார்கள். குரல் சிலிர்த்தாலும், வாய் கூசினாலும், கடமையை எண்ணி, கேட்போரின் பிரமையையும், சந்தேகத்தையும் போக்கி, நான்கு தடவைகள் சொன்னார்கள்.

எங்கும் பரபரப்பு - சோகம்.

"என்ன?" என்று திகைப்புடன் கணவனின் பக்கத்தில் ரேடியோவருகில் நின்று விழித்துக்கொண்டிருந்த பத்மாவிடம், அரைகுறை விடைபெற்று, வீட்டிற்கு ஓடி வந்தேன்.

எனக்கும் அங்கே இருப்பாக இருக்கவில்லை. அப்பாவுக்கும் சொல்லணும் செய்தி என்று ஓடி வந்தேன்.

செய்தி கேட்டு விழித்த அம்மாவை, " அப்பா எங்கே!" என்று கேட்டேன்.

"அப்பா எங்கேடி இருக்கா? ஊருக்குப் போயிருக்காளே!" என்று நினைப்பூட்டினாள் அம்மா. நான் விழித்தேன்.

அப்பாவுக்கு காந்திபக்தி அதிகம். எப்படித் தாங்குவாரோ இந்தச் செய்தியை என்ற கவலையும் சார்ந்தது எங்களை, இப்போது.

அன்று இரவு ஊர்மீள வேண்டிய என் தந்தை, வர இயலவில்லை. எங்கும் நடந்த ஹர்த்தால் முதலியவற்றால் போன காரியம் சீக்கிரம் முடியவில்லை. இரண்டு மூன்று நாள் கழித்து வந்தார்.

வந்தவர் ஒரு துணுக்கந்தரும் செய்தியுடன் வந்தார். அத்தான் பலராமன் ஏதோ சங்கம் ஒன்றில் சேர்ந்தவனாம். மகாத்மாவின் கொலைக்குச் சூழ்ச்சி செய்தவர்கள் இந்த சங்கக்காரர்கள் என்ற ஐயம் எழுந்திருப்பதால், சங்கத்தைச் சார்ந்தவர்களை. அரசாங்கம் கைது செய்கிறது. அத்தானையும் கைது செய்ய நேரலாம்; இது தான் விஷயம்.

அத்தான் எங்கேயோ இருந்திருந்தால் எங்களுக்கும் அப்பாவிற்றும் அவனைப் பற்றிய கவலையோ பொறுப்போ ஏற்பட்டிராது. அத்தான் இந்த ஊரிலேயே இருந்தான். ஹாஸ்டலில் தன் பெரியப்பா பிள்ளையுடன் இருந்து வந்தான். கல்லூரி மாணவன்.

அப்பா போயிருந்தது அத்திம்பேரின் ஊருக்குத்தான். பிள்ளையை எச்சரிக்கை செய்து ஜாக்கிரதையாக இருக்கும்படி அத்தையும் அத்திம்பேரும் அப்பாவைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

அத்திம்பேர் கடிதமூலமும் என் தந்தையின் மூலமும் பிள்ளைக்கு எச்சரிக்கையும் புத்திமதியும் விடுத்துவிட்டுத் தாமும் இரண்டொரு நாட்களில் இங்கே வருவதாகக் கூறியிருந்தார்.

அப்பா புறப்பட்டார். அத்தானின் ஹாஸ்டலை நோக்கி, பொறுப்பாக, ஊர் வந்த மூன்றுமணி நேரங்களுள். பிற்பகல் மூன்று மணி சுமாருக்குப் புறப்பட்டுவிட்டார்.

'அத்தானையும் கைது செய்து விடுவார்களா?' என்று எனக்கும் மற்றவர்களைப்போல் துணுக்கமாகவும் வருத்தமாகவும் இருந்தாலும் 'முரட்டு அத்தான் தான்!' என்று எனக்கு ஒரு ஊர்ஜிதம் மனதில்! அவனைப் பற்றி கவலையோ ஏக்கமோ ஏற்படவில்லை எனக்கு! அப்பா அத்தானைப் பார்க்கக் கிளம்பிப் போனதும், நான் அம்மா இருந்தவிடம் போனேன் ஏதோசொல்ல; சொல்வதற்கு நாயெழவில்லை.

"அம்மா! நாமெல்லோரும் மூன்று வருஷங்களுக்கு முன்பு அத்தை வீட்டிற்குப் போனபோது எப்போது பார்த்தாலும் அத்தான் 'சங்கத்துக்கு!', 'சங்கத்துக்கு!' என்று ஓடிக்கொண்டிருந்தானே - அதான் போலிருக்கு இந்த ஆர்.எஸ்.எஸ்!" என்று மட்டும் சொன்னேன். "ஆமாண்டி!......நிஜந்தான்! அதான் போலிருக்கு! உனக்கு நினைவிருக்கே!" என்றாள் அம்மா, ஆச்சரியமுடன்.

"அத்தானைப்பற்றி இவ்வளவு நினைவு வச்சிருக்கிறவள், பின்னே எதுக்காகத்தான் அப்படி மூஞ்சியை வலிச்சயோ - கல்யாணம் பண்ணிக்கிறயான்னு கேட்டதுக்கு!" என்று ஒரு புன்னகையுடன் சொன்ன அம்மா, "தெரியும் போலிருக்கு இப்படி நடக்கப் போறது, ஜெயிலுக்குப் போவான்னு!" என்று தொடர்ந்து தானே கூறிவிட்டுப் பேச்சை முடித்தாள். நான் வந்துவிட்டேன் வாசலுக்கு. ஆனால் மனதில் என்னமோ குடைச்சல்.

'அத்தானைப் பற்றி மறந்துவிட முடியுமா?.....' என்றது என் உள்ளம். அந்த நினைப்பில் காரசாரம்தான்!

அத்தை வீட்டில் இருந்தேன். பெற்றோருடன் போயிருந்தேன் ஒரு நாலு நாளைக்கு.

"என்ன அத்தான் இது! மரகத்தியா?" என்று கேட்டேன் நான். திருக்கிட்டுப் பார்த்தான் அத்தான்!

"ஏய், என்னது! வைடீ! போடீ, உன் காரியம் பார்த்துண்டு!" என்று சீறினான் அத்தான். துணுக்கமுற்ற அத்தான்.

"காரியமென்ன இருக்கு வேறே? உன்னுடைய புஸ்தகங்களைப் பார்க்கலாம்னுதான் வந்தேன்" என்று சொன்னேன் அச்சமுடன்,

"அது சரி . . .ஆனால் இந்த இதையெல்லாம் ஏன் எடுத்தே!.... கத்தாதே! உன்னுடைய தம்பி தங்கை வால்கள் விடாதுகள் தெரிஞ்சால்! விளையாடக் கேட்குங்கள்! என்றான் அத்தான் அடங்கிய குரலில்.

"சரி, இதோ போயிடறேன்! ஏதாவது புஸ்தகம் தாயேன் - இதென்ன புஸ்தகம்?" என்று அங்கிருந்த ஒரு புஸ்தகத்தை எடுத்தேன்.

"ஏய்! வை, வை! இது என்ன துணிச்சல்!' என்று மீண்டும் சீறினான் அத்தான், அறையாத குறையாக.

அழாத குறையாக நான் வந்து விட்டேன் அப்பால். அன்று மாலை "சினிமாக்குப் போகலாம்!" என்று அவனே விட்டார் எல்லோரையும் கிளப்பிவிட்டதையும், சினிமாவைப் பற்றி அவன் வேடிக்கைகள் செய்ததும்தான் எனக்கு ஏதோ கொஞ்சம் உவகை தந்தது அவன் விஷயமாக. மறுநாள் புறப்பட்டுவிடப்போகிறோம் அங்கிருந்து; அப்படியிருந்தும் அவன் மீண்டும் சீற்றங்காட்டி என்னை அதிரடித்ததுதான் என் மனம் விட்டு அகலவில்லை. அவனுடைய அறையில் சுவர் ஓரமாக இருந்த ஒரு முதியவரின் படத்தைக்காட்டி "யார் அது, அத்தான்?" என்று வெகு மெதுவாகக் கேட்டேன்.

"உனக்கெதுக்குடீம்மா? . . . அதெல்லாம் ரொம்ப முக்கியமோ உனக்கு?" என்று அதட்டலாகச் சொன்னான் பதில். எதற்கு அவ்வளவு கோபமோ என் கேள்விகளில்? எனக்கு அவன் மீது இருந்தகொஞ்சம் நஞ்சம் நல்லெண்ணமும் போய்விட்டது.

'அப்பா!...... மகா முரடு; ஒரே சீற்றம்தான்!' என்று நினைத்துக்கொண்டேன்.

அத்தையிடம் ஏதோ பேச்சுவாக்கில், "எதுக்கு அத்தை - சங்கம், சங்கம்னு பறக்கிறான். அத்தான்?" என்று கேட்டேன். "அதென்னவோ சங்கப்பித்துப் பிடிச்சிருக்கு! தடிக்கம்பு வச்சிண்டு சண்டையாம், குஸ்தியாம்! முரட்டுத்தனம் ஏற்கெனவே! வயசுத்துடுக்கு! இப்போ என்னமோ மஹா முரடாயிருக்கு பிள்ளை!" என்று என் அபிப்பிராயத்தை ஊர்ஜிதம் செய்துவிட்டாள் அத்தை.

இன்று அந்த ஊர்ஜிதத்தையும் உறுதிப்படுத்திவிட்டது அப்பா கொணர்ந்த தகவல்!

ஆனால் என் மனதில் குடைச்சல்? தெரியவில்லை. அன்று மாலை பத்மாவிடம் போனேன், சொன்னேன்.

அப்பா கொணர்ந்த தகவல்தான் சொன்னேன்; வேறு எதுவுமில்லை.

"அதான் - பயம் போலிருக்கு! அழுதிருக்கான்!" என்றாள் பத்மா. ஒரு லேசான புன்னகையுடன்.

"என்ன அழுதானா? எப்போது?" என்று கேட்டேன் நான்.

“அன்றைக்குத்தான் புருஷாள்ளாம் ரேடியோ சன்னிதானத்துலே கூடி காந்திஜி தகனம் வரைக்கும் இருந்துவிட்டு வந்தார்களே - அன்றைக்கு. உன் அத்தான் பலராமனும் வந்திருந்தானாம் தன் பெரியப்பா பிள்ளையுடன். பலராமன்தான் எல்லோரையும் விட ஜாஸ்தி அழுதானாம், அவர் சொன்னார் வந்து! பயம் பிடிச்சுடுத்துபோலிருக்கு அன்னிக்கே?” என்று முடித்தாள் பத்மா.

அவள் பேச்சுக்கேட்டு எனக்கு வருத்தமும் கோபமும் உண்டாயின. ஆனால் மறுபேச்சு பேசி அத்தானுக்கு மானம் காக்க, எனக்கு வகை தெரியவில்லை. வீட்டுக்குச் சீக்கிரமாகவே வந்துவிட்டேன்.

நான் வந்தபிறகும் வெகு நேரமாயிற்று அப்பா வருவதற்கு. "பாவம், ரொம்ப வருத்தப்படுகிறான் பலராமு. என்னவோ - சங்கடமாத்தான் இருக்கு, அவனைப் பார்த்தால். தலை மறைவாயிருக்க மாட்டானாம். 'எனக்கு வேண்டியதுதான் அவமானமும் தண்டனையும்!' என்கிறான் பிள்ளையாண்டான்!" என்று தகவல் கொணர்ந்தார் அப்பா அத்தானைப் பற்றி.

‘தண்டனையை ஏற்கப் பிடிவாதமாயிருக்கிறான் என்பதனால் அதே முரட்டுத்தனம்தான்!’ என்று தோன்றவில்லை எனக்கு, இப்போது! ‘பெருங்குணம்! ஒளிவதையும். குற்றத்திலிருந்து தப்பவும் விரும்பவில்லை நம் அத்தான்!" என்று தோன்றலாயிற்று என் மனதில்.

"இவ்வளவு நல்ல அத்தானுக்கு என்னவாகிவிடுமோ!" என்று எனக்குத் தோன்றினதுபோலவே, வீட்டில் அனைவருக்கும் கவலை. ஆனால் அப்பா சமாதானம் சொன்னார்.

“யாரோ ஒரு சில பேர்தான் பொறுப்பாளிகளாய் இருக்கலாம் அதற்கு! இவர்களைச் சாராது! எனினும் கைது செய்வார்கள். கொஞ்ச நாளைக்குள் விடுதலை செய்துவிடுவார்கள். பலராமு ஐந்தாறு வருஷங்களாய் சேர்ந்திருக்கிறான் போலிருக்கு! அதனால் எப்படியும் பிடிப்பார்கள். ஆனால் அபாயமில்லை! விடுதலை செய்து விடுவார்கள்!" என்றார்.

"ஆம், அப்படித்தான் இருக்கலாம்!......." என்று மனந்தேறினோம். அப்பா சொன்ன ஆறுதலான விஷயத்தை பத்மாவுடன் பகிர்ந்து கொள்ள, மறுநாள் போனேன். அவள் என்னைவிட வயதிலும் பெரியவள் - திருமணமானவளாதனால் அனுபவங்களிலும் பெரியவள், ஆனால் அவள் என்னுடன் படித்தவள். போன வருஷம்தான் படிப்பை நிறுத்தினவள். அதனால் எங்களிடையே நெருங்கிய பழக்கம், அன்பு உண்டு. அவளுடன் பகிர்ந்துகொள்ளப்போவேன், எவ்விஷயமும். சொன்னேன் அத்தானைப் பற்றிய ஆறுதலான தகவலையும்.

** ** **

அப்பா அத்திம்பேரைக் கூட்டிக்கொண்டு, அத்தானின் ஹாஸ்டலுக்குப் புறப்பட்டுப் போனார். வரும்பொழுது, நான் சற்றும் எதிர்பாராத விதமாக அத்தானுடன் வந்தார்கள் இருவரும். அத்தானைக் கண்டதில்லையா நான்?........... மாதத்திற்கு ஒருதடவையாவது பார்த்துக்கொண்டுதானிருந்தேன் முன்பெல்லாம்; இப்போதுதான், ஒரு ஆறுமாத காலமாக, அவனைப் பார்க்கவில்லை! ஆனால் இப்போது அத்தானைப் பார்த்த பிறகு நானே ஒரு புதியவளாக மாறிவிட்டேன். ‘முரடு’, ‘முரட்டுத்தனம்’ என்ற நினைப்பில் அத்தான் வரும்போதெல்லாம் நான் அக்கம் பக்கத்துக்குப்போய் விடுவதும். அவனுடன் பேசாமல் 'உர்'ரென்று வீட்டில் நடமாடுவதுமாக இருப்பேன்; அவன் இருக்கக் கூடிய அந்தக் கால்மணியும் அரைமணியும் அப்பாவுடனோ அம்மாவுடனோ பேசிக் கழித்துவிடுவான். போய்விடுவான் அவன். இங்கே வீட்டிற்கு வருவதிலும் போவதிலுங்கூட நான் கொஞ்சங்கூட அக்கரையோ ஆசையோ கொண்டதில்லை. ‘ஏனோதானோ’ என்று அவன் விஷயத்தில் நடந்து கொண்டதில் முதல் தரமானது என் நடத்தை!

ஆனால் இன்று, ‘குற்றவாளி’யாக வந்த அத்தானைக் கண்டு, நானும் ‘குற்றவாளி’ போலவே ஒடுங்கினேன், கவன்றேன், நெட்டுயுர்ந்தேன்!

"இங்கே இருக்கவேண்டாம்! ஊருக்கு வந்துவிடு! இல்லை, ஊருக்கு வர இஷ்டமில்லாவிட்டால் இங்கே தலைமறைவாய், மாமா, மாமியுடன் இரு! கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்!" என்று கெஞ்சிக் கொண்டேயிருந்தார் அத்திம்பேர். அத்தான் வாய் திறந்து சொன்ன பதிலெல்லாம், "ஊஹூம்! என்னால் ஒளிய முடியாது! மாட்டேன்!" என்பதுதான்.

அத்தான் என்னையும் அடிக்கடி பார்த்தான். அந்தப் பார்வையில் வெட்கமா? தாபமா? கோபமா? கெஞ்சுதலா? புரியவில்லை; என் மனசும் எனக்குப் புரியவில்லை! அவன் மனசா விளங்கும்?

அன்று இரவு ஒன்பது மணியாகிவிட்டது; மச்சில் இருந்தான் அத்தான். கீழே எல்லோரும் இருந்தோம். அத்தான், விட்டவர்களின் பார்வையினின்று தப்ப முடியுமா? அவன் ஓடணும் என்று முயன்றாலும் கீழே இறங்கித்தானே வாசலுக்கு ஓடவேண்டும்! அதனால்தான் மச்சில் அத்தானுக்கு சுதந்திரம் கிடைத்தது!

மச்சு மேல் என் புத்தகம் ஒன்று இருந்தது.

"புஸ்தகம் எடுத்துக்கணுமே!" என்றேன் நான், தயங்கி.

"ஏன் போய் எடுத்துக்கோயேன்! அதென்ன அவ்வளவு பயம், அத்தானைப் பார்த்து?" என்றார் அப்பா.

"அதென்னவோ, இந்தப் பொண்ணு அத்தானன்னா அவ்வளவு நடுங்கறது! ஒரு நாளாவது முகங்கொடுத்துப் பேசினதேயில்லை!" என்று முணுமுணுத்தாற்போல் - அத்திம்பேர் செவியில் எட்டும்படியாகவே அப்பாவிடம் 'கோள்' சொல்வது போலவே - முணுமுணுத்தாள் அம்மா.

"அதான் - இஷ்டப்பட்டதாக, சம்மதப்படுகிறதாக - எழுதல்லே நீங்கள்! என்னமோ - முடிச்சு இல்லேபோல்தான் இருக்கு! அதுவும் இப்போ இவன் இப்படியாயிட்டான்!" என்றார் அத்திம்பேர் - குரல் இழுபட.

இந்த அமளியில் மச்சு ஏறினேன் நான்.

'பயத்தினால் அல்ல - கூச்சத்தினால், தயங்கினேன். இப்போது!' என்று சொல்லவில்லை நான்!

மச்சில் என் புத்தக அலமாரியண்டை காட்சி தந்தான் அத்தான்.

"எனக்குப் புஸ்தகம் எடுத்துக்கணும்!" என்றேன்.

"எடுத்துக்கோயேன்!" என்று விலகி நின்றான் அத்தான்.

நான் எடுத்துக்கொள்ள வேண்டிய புத்தகத்தைக் கையில் எடுத்தேன். பளிச்சென்று ஒரு நினைப்பு வந்தது!

"பச்சை கலர் அட்டை!" என்றேன். எப்படி தைரியம் வந்ததோ சொல்ல! இப்போது வியப்பாயிருக்கிறது!

'கொழுப்பு!' என்பதுபோல் பார்த்தான் அத்தான் என்னை. "காந்திஜி, பாகிஸ்தானுக்கு வேண்டியிருந்த பண உதவியைச் செய்யணும்னு சொன்னதுதான் பிடிக்கலையாமே, சங்கக்காரர்களுக்கு! அப்பா சொன்னார்!" என்றேன் நான்.

மறுபடியும் ஒரு தினுசாகப் பார்த்தான் அத்தான்.

"சரி..... ரொம்ப சரி! நானும்தான் கொலைகாரன்! திருப்தி தானே உனக்கு!" என்றான் அடுத்த நிமிஷம் ஆவேசமாக.

நான் ஒரு தினுசாக அத்தானைப் பார்த்தேன் இப்போது! குடுகுடுவென்று வந்துவிட்டேன்.

அத்தையகத்தில் இருந்தபோது சினிமாவுக்குப் புறப்பட்டபோது, பச்சை நிறப்புடவை உடுத்திக் கொண்டு நான் கிளம்பியபோது "இந்தக் கலர்தானா அகப்பட்டது!" என்று அத்தான் சொன்னான் என்று உடனே, அவனைத் திருப்தி செய்ய, உடைமாற்றிக்கொண்டு, அரக்கு நிறப் புடவையில் காட்சியளித்தேன்!

"பேஷ்!" என்றான் அத்தான்!

இன்று அந்த 'பச்சை கலர்!' என்று நான் சொன்னதால் எனக்கு ஏற்பட்டது திருப்தியா, வருத்தமா? வருத்தம்தான்!

கீழிறங்கி வந்த எனக்குப் படிப்பில் கவனம் செல்லவில்லை. அப்புறம் ஏற்பட்ட அதிர்ச்சியினால் இரவு முழுதும் நிம்மதியான நித்திரையில்லை!

"பலராமு!" என்ற பல குரல்களுக்கும் பதில் வராததால் மேலே போய்ப் பார்த்தார்கள் அப்பா, அத்திம்பேர். எல்லோரும்! நானும் போய்ப்பார்த்தேன். அத்தானைக் காணோம்!

"எப்படியோ மச்சிலிருந்தே இறங்கி - மச்சுப்படிகள் வழியாக மட்டும் நிச்சயமாக இல்லை! - குதித்தோடி விட்டான்!" என்று நிச்சயம் செய்யப்பட்டது!

"நான் கொலைகாரன்தான்!" என்றானே அத்தான்! வருத்தமும் நான் ஏசுவதுபோலச் சொன்னதும் தாங்காமல், எங்கேயாவது தற்கொலை செய்துகொண்டுவிட்டானோ?"

ஒரு தடவை அழுதுவிட்டேன்.

'அத்தான் வரட்டும், நல்லபடியாய்! நான் உடனே . . . ' என்று விம்மியது என் அந்தரங்கம்.

கைதுமாகி, விடுதலையுமாகி வந்துவிட்டான் அத்தான், ஓரிரண்டு வாரங்களுள்.

"கடைசிக் கடைசி! சொல்லி விடு! - தை போயிடுத்து! எப்படியும் இந்த வருஷம் உனக்கும் செய்தாகணும்! - அவன் புருஷன், அவனுக்கு அவசரமில்லைன்னு நினைக்கவும் வகையில்லை - அவனுக்கும் கட்டாயம் நடந்தாகணும் இந்த வருஷம்! ஏதோ - உனக்கு என்ன உத்தேசமோ சொல்லிவிடு!" என்றாள் அம்மா.

கடைசிக் கடைசியாகக் கேட்ட அம்மாவுக்கு, முதல் முதலாக, என் அத்தான் மீது எனக்குத் தோன்றிவிட்ட விருப்பைப் புலப்படுத்தினேன்.

** ** **

இவ்வளவுதான் - எழுதினேன் என் 'காதற்'கதையை. ஆனால் முடிக்கும் வகை தெரியவில்லை.

அவர் வருவதற்குள், அழகான முடிவுடன் எழுதிவைக்க வேண்டும் என்று அவா. ஆனால் இயலவில்லை.

எழுதிய தாள்களை ஒழுங்கு_படுத்தி வைத்துவிட்டு, யோசிக்க உட்கார்ந்தேன்!.... இதுவரை நான் எழுதினபோது யோசனைகள் ஏது?..... கற்பனையா?..கு... அனுபவங்களைத் தானே வரைந்தேன்!

"இதுதான் என் காதற்கதை!..... ஆனால் முடிவு கிடையாது இந்தக் கதைக்கு!..... 'எங்கள் காதல் வாழ்வு இன்னும் பல வருஷங்கள் நீடிப்பதாயிற்றே!' என்று சமத்காரமாக முடிக்கலாமா?" என்று தோன்றியது.

'மகாத்மா நூற்றிருபத்தைந்து ஆண்டுகள் இருப்பார்!' என்று இருந்து வந்த நம்பிக்கைபோல் இதுவும் ஏதாவது'?

"கூடாது! அப்படி எழுதக் கூடாது!" என்று அந்த யோசனையைக் கைவிட்டேன்.

திடீரென்று நினைவு வந்தது. 'மகாத்மாவின் மறைவைப் பற்றி எழுதும்போது நல்லாண்டாகவே விளங்கிவிட்டது எங்களுக்கு! என்று எழுதியது நியாயமல்ல, அழகல்ல,' என்னும் ஒரு பச்சாத்தாப உணர்ச்சியினால்தானே, எழுத ஆரம்பித்தோம் இந்த விஷயம்!

அழகல்லாததை எழுதியதற்குப் பரிஹாரம் தேடும் யோசனையில்தானே, புகுந்தேன் இப்படி எழுதுவதற்கு?

அப்படியானால், முடிவு எப்படி இருக்க வேண்டும்? யோசித்தேன், தெளிவாகத் தெரியவில்லை.

"மகாத்மா நம்மிடையே இல்லை என்பதால், நமக்கு அவர் உறைத்துப் போன உபதேச மொழிகளில், நாம் அதிகம் சிரத்தை கொள்வோம்!" என்று சொல்கிறார்கள். 'அவர்' கொஞ்சம் முரட்டுச் சுபாவம் உள்ளவர் என்ற என் அச்சமும், அவர் விஷயத்தில் என்னை அதிகம் பணிவுடன், அமரிக்கையுடன் நடந்து கொள்ளச் செய்கிறது. காந்திஜியின் லட்சியம் நிறைவேறுவது போலவே என் வாழ்க்கை லட்சியம் - இன்ப வாழ்வு - நிறைவேறும்!"

இப்படி எழுதலாமா?

முடிவு செய்ய முடியவில்லை. "முரடன் என்றுதான் இன்னும் உன் எண்ணமா? அதனால்தானா உன் பணிவு?" என்று அவர் கேட்பாரானால்? படிக்க வேண்டாம் அவர் என்று எப்படி இருப்பது? அதுவும் முடியாது! என் மனம் போன போக்குகளை அவர் அறியட்டும்; 'டயரி யில் எழுதினதற்குப் பரிஹாரம் தேடணுமென்று நான் எழுதுவதை அவரும் பகிர்ந்து ரசிக்கட்டும்', என்று எழுதியதை, அவர் படிக்க வேண்டாமா? அச்சுக்கு அனுப்பவா எழுதினேன் நான்?

அவர் குரல் கேட்டது. கதையின் முடிவை எழுதவில்லை நான்; வந்துவிட்டார்.

வந்தவரிடம் கொடுத்தேன் எழுதியதை. "முடிவு எப்படி இருக்கணும்? சொல்லுங்கள்!" என்றேன்.

"கொண்டா பேனா!" என்றார். கொடுத்தேன்.

"மகாத்மா ஊனும் உடலும் கொண்டு நம்மிடையே இருந்த போது அவர் நமக்கு அறிவுறுத்திய அறிவுரைகள் சிறந்தவை. ஆனால், அவர் உடல் நீத்து, உயிர் துறந்து, நாட்டின் ஜோதியாக மாறி, நமக்கு

அளிக்கப் போகும் அறிவு விளக்கங்களே அவற்றைவிடச் சிறந்து விளங்கும்!" என்று அன்று, அவர் உயிர் துறந்தன்று சொன்னார்கள்.

ஆம், இதோ, எங்கள் இருவரையும் பிணைத்திருக்கும் அன்பு - அந்த மகானின் பிரிவுக்குப் பின்னர் எழுந்ததுதான்! எங்கள் உள்ளங்களிலும், வாழ்க்கையிலும் விளக்க ஏற்றிய மகானின் ஆவிச்சுடர், நாட்டுக்கும் ஜோதியேதான்!"

இவ்வாறு எழுதி முடித்தார் என் கணவர்.

"என் மனதில் நிஜமாகவே அன்று, அந்த வருத்தத்தில் அப்படித்தான் தோன்றிற்று! எப்படித் தெரிந்தது உங்களுக்கு?" என்று கேட்டேன் மாபெரும் வியப்புடன்

"எனக்கும் அப்படித்தானே தோன்றிற்று அன்று!" என்று விடை பகர்ந்தார் அவர்.

"அடடா! இது தெரியாமல் போச்சே  எனக்கு!" என்று நான் இன்னும் வியப்பெய்தினேன்.

இந்த ஞாயிறு நினைப்பூட்டத்தான் ஊட்டுகிறது, அன்று ஏற்பட்ட வருத்தத்தை! ஆனால், காந்திமஹான் எங்களிடையே ஏற்றிவிட்ட இன்ப ஒளி, மிஞ்சிவிடுகிறது, இந்த ஞாயிறு எழுப்பும் சோக தீபத்தை!" என்று எழுதினேன் மீண்டும், டயரியில்.

ஜனவரி 30-ம் தேதி தாளில் தான் எழுதினேன். ஏது மற்றொரு தாள்?

வரும்போது அவர் ஒரு டயரி புதிதாக வாங்கி வந்திருந்தார்.

"இப்படி எழுதியிருந்தாயே! என்னமோ போல் இருந்தது! பரிஹாரம் செய்ய, இதில் வேறு தினுசாக எழுதணும் என்று வாங்கி வந்தேன்!' என்று கொடுத்திருந்தார் என்னிடம். நான் அதில் எழுதியிருந்ததைப் படித்தார்.

"அதே அர்த்தம்தான் தொனிக்கிறது இந்தக் குறிப்பும்!'சோகத்தை மிஞ்சிவிட்டது இன்பம்!' என்றுதான் எழுதிவிட்டாய்!" என்றார் அவர்.

"உண்மைதான் வேண்டும் காந்திஜிக்கு!

'உங்கள் மனம் புண்படக்கூடாது என்று எழுதினாலும், உண்மைதான் தொனிக்கிறது! என்ன செய்ய?" என்றேன் நான் சிரித்துக்கொண்டே.

"நிஜந்தான்!" என்று அவர் ஒப்புக்கொண்டுவிட்டார், அன்பு மிகுதியினால் கோபங் கொள்ளவில்லை. இரண்டாம் டயரி வாங்கிவிட்ட தோஷத்திற்காக, அவரும் நினைவுக்குறிப்புக்கள் எழுதத்துவங்குவதாகச் சொல்லிவிட்டார். அதில் அவரும் உண்மைகள்தானே எழுதமுடியும்?

**********

(சுதேசமித்திரன், ஜனவரி 30, 1949)